# புறக்கணிக்கப்பட்ட மக்களுக்காக ஊழியர்களை அனுப்புங்கள்


சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் S2b பாடத்தைப் படிக்கவும்.

**ஜெபம்:** "அன்பான கர்த்தாவே. உமது மாபெரும் ஆணைக்குக் கீழ்ப்படியவும், கிறிஸ்துவுககுள்ளான இரட்சிப்பைப் பற்றிய நற்செய்தியை அறியாத மக்களுக்கு பணியாளர்களை அனுப்பவும் எங்களுக்கு உதவுவீராக."

1. **புதிய மந்தைகள் பெருகும் ஒரு புறக்கணிக்கப்பட்ட களத்தில், மக்களுக்கு மத்தியில் கிறிஸ்துவுக்காக ஒரு இயக்கத்தை ஆரம்பிக்க ஆயத்தமாகுக.**

**குறிப்பு:** எருசலேம், யோப்பா, அந்தியோகியா, ரோமாபுரி, எபேசு, கெலோசியப் பட்டிணங்கள் ஆகிய புதிய ஏற்பாடு கூறும் இடங்களில் உள்ள சபைகள், பிற இடங்களுக்கு சீஷர்களை உருவாக்க ஊழியர்களை அனுப்பின.

சென்று சாட்சிகளாய் இருக்குமாறு தன் சீஷர்களிடம் கூறிய நான்கு இடங்களை **அப்.1:8ல்** காண்க. (பதில்கள்: ***எருசலேம்*** (உங்கள் சொந்த சமுதாயம், கலாச்சாரம், மொழி மக்களைக் குறிக்கிறது), ***யூதேயா*** (ஒரே கலாச்சராத்தின் அருகிலுள்ள புறக்கணிக்கப்பட்ட சமுதாயத்தைக் குறிக்கிறது). ***சமாரியா*** (அருகில் உள்ள வேறு கலாச்சார மக்களைக் குறிக்கிறது), **உலகத்தின் கடைசி பரியந்தம்** (தூர தேசத்திலுள்ள முற்றிலும் வேறுப்பட்ட கலாச்சார மக்கள்).



பவுலையும் பர்னபாவையும் அனுப்ப அந்தியோகியா சபை என்ன செய்தது என்பதை **அப். 13:1-3** ல் காண்க.

புதிய சபைகளை அமைக்க பவுலும் பர்னபாவும் செய்த எல்லா விஷயங்களையும் பற்றி **அப்.13 & 14** ஐ வாசித்து குறிப்பெடுக்கவும்.

தங்களை அனுப்பிய சபைக்கு திரும்பி வந்த உடன் பவுலும் பர்னபாவும் என்ன செய்தனர் என்பதை **அப்.14:26-28ல்** காண்க.

சுவிசேஷம் கூறும்போது நாம் அறிவிக்க வேண்டிய விஷயங்களை **லூக்.24:46-48ல்** காண்க. நீங்கள் அனுப்பும் ஊழியர்களுக்கு இந்த நான்கு திறமைகளோடு பிற திறமைகளும் இருக்க வேண்டும்.

**நற்செய்தி ஊழியர்கள் நாடிக் கற்கவேண்டிய நான்கு திறமைகள்:**

**திறமை-1.** பிற கலாச்சாரங்களுக்கு ஏற்ப மாறுதல்.

- உங்கள் சொந்த சபையைப் போலவே புதிய விசுவாசிகளும் ஆராதனை செய்ய வேண்டும், சுவிசேஷம் கூற வேண்டும் என்று வலியுறுத்தாதீர்கள்.
- கலாச்சார வேறுபாடுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். இயேசு மற்றும் அவரது அப்போஸ்தலர்களின் கற்பனைகளுக்கு கீழ்ப்படிதலைத் தவிர வேறு கட்டளைகளைப் போட வேண்டாம்.
- வேறு மொழிகளை ஊழியர்கள் கற்க வேண்டியதாய் இருக்கும்.
- புதிய விசுவாசிகளால் செய்து மற்றவர்களுக்கும் சொல்லிக் கொடுக்க முடிந்த முறைகளையே உபயோகிக்கவும்.
- புதிய சபையில் புதிய ஊழியருக்குக் கிடைக்கக் கூடிய கருவிகளையே உபயோகிக்கவும்.

- அந்தந்தப் பகுதி மக்களோடு இணைந்து வாழவும். அவர்கள் மேல் அன்பு காட்டவும். அவர்களுக்கு மத்தியில் நண்பர்களை உருவாக்கவும்.

**திறமை-2.** குடும்பத்தில் இருந்து குடும்பத்திற்கும், நண்பர்கள் இடத்தில் இருந்து நண்பர்களுக்கும் நற்செய்தி 'பாயும்' வகையில் சுவிசேஷம் அறிவிக்கவும். புதிய விசுவாசிகள் தங்கள் நண்பர்களுக்குக் கூறும் வகையில் இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதல் பற்றிய கதைகளைக் கூறவும். புதிய விசுவாசிகளுக்கு கிடைக்க அல்லது உபயோகிக்கக் கடினமான கருவிகளையோ அல்லது முறைகளையோ பயன்படுத்த வேண்டாம். (எப்போதாவது நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகளைத் தவிர.)

**திறமை-3.** இயேசுவின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படியுமாறு போதித்து, புதிய விசுவாசிகளை சீஷர்களாக்க வேண்டும். அவரது அடிப்படை கற்பனைகளாவன: மனம்திரும்புதல், விசுவாசித்தல், கர்த்தரின் பந்தியை ஆசரித்தல், நடைமுறையில் தேவனையும் மற்றவர்களையும் நேசித்தல், ஜெபித்தல், கொடுத்தல், சீஷர்களை உருவாக்குதல்.

**திறமை -4.** சபைகள் வளர்க்க வேண்டும் என்று புதிய ஏற்பாடு கூறும் நடவடிக்கைகளைக் கற்றுக் கொள்ளவும்.

- இயேசுவைப் பற்றி பிறருக்குக் கூறி, மனம்திரும்பிய விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் அளித்தல், லூக்கா 24:46-48: அப்.2:38.
- புதிய சீஷர்களுக்கு இயேசுவின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படியுமாறு போதனை செய்யுங்கள், மத்.28:18-20.
- சபையாக ஆராதித்து, கர்த்தரின் பந்தியை ஆசரியுங்கள், மத்.26:16-28.
- ஜெபித்து மன்றாடி ஆவிக்குரிய யுத்தத்தை நடத்தவும். குடும்பங்கள் ஒன்றாகக்கூடி ஜெபிக்கவும். எபே.6:10-18.
- அன்பான ஐக்கியத்தை வளர்த்து இல்லாதவர்களுக்கு நடைமுறையில் சேவைசெய்யவும், யோவான். 13:34.
- கொடுத்து, கிறிஸ்தவ பராமரிப்பாளர் பொறுப்பை பயிற்சி செய்யவும், லூக்.6:38.
- ஒருவருக்கொருவரும் தங்கள் சமுதாயத்திற்கும் எவ்வாறு சேவை செய்வது என்பதை விசுவாசிகளுக்கு போதிக்கவும் எபே. 4:11.
- குடும்ப வாழ்க்கையை பலப்படுத்தி, பிரச்சினைகளின் போது உதவி, குற்றமிழைப்போரைத் திருத்தவும். 2 தீமோ.3:16-17.
- பல்வேறுபட்ட ஆவிக்குரிய வரங்களைக் கொண்டு ஒருவருக்கொருவர் சேவை செய்யும்படி விசுவாசிகளை ஒருங்கிணைக்கவும். 1 கொரி.12.
- அருகிலும், புறக்கணிக்கப்பட்ட மக்கள் மத்தியிலும் சபைகளையும் குழுக்களையும் ஆரம்பியுங்கள். அப்.1:8.
- புதிய தலைவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் போது அவர்கள் மேலும் புதிய தலைவர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில் எளிதான முறைகளைக் கைக்கொண்டு பயிற்றுவிக்கவும்.

**2. புறக்கணிக்கப்பட்ட மக்கள் சமுதாயத்திற்கு, ஊழியர்களை அனுப்புவதற்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்.**

இந்த முக்கியமான நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்ய பலவாரங்கள் பிடிக்கும்.

- பெருகக்கூடியதும், உங்கள் ஊழியர்கள் போகக்கூடியதுமான சபைகள் இன்னும் எந்த மக்கள் கூட்டங்களுக்கு தேவைப்படுகிறது என்பதை அறிக.
- சென்று சேருவதற்காக உங்கள் சபை தெரிந்து கொண்ட புறக்கணிக்கப்பட்ட மக்களுக்காக ஜெபிக்கவும்.

- புறக்கணிக்கப்பட்டக் களங்களுக்குச் செல்ல விருப்பம் கொண்ட விசுவாசிகளை சந்தித்து அவர்களை ஆயத்தப்படுத்தத் தொடங்கவும். தேவைப்படும் திறமைகளைப் பெற உடனடியாகப் பயிற்சிகளைத் தொடங்க அவர்களுக்கு உதவுங்கள். (இவை மேலே பட்டியல் இடப்பட்டுள்ளன).
- புறக்கணிக்கப்பட்ட களங்களுக்கு ஊழியர்களை அனுப்ப ஆர்வம் காட்டிய விசுவாசிகளை சந்திக்கவும். ஆயத்தம் செய்து ஊழியர்களை அனுப்புவதில் அவர்கள் உங்களுக்கு உதவும் வழிகளை ஏற்பாடு செய்யவும்.
- ஊழியர்களைத் தாங்குவது எவ்வாறு என்பதைத் தீர்மானிக்கவும். அவர்கள் உங்கள் சபையில் இருந்தா அல்லது வேறு சபையில் இருந்தா ஆதரவைப் பெறுவார்கள்? அல்லது புதிய ஏற்பாட்டில் காணும் ஆக்கில்லா, பிரிஸ்கில்லா, பவுல் மற்றும் பிறரைப் போல சுயமாகத் தங்களைத் தாங்களே தாங்கிக் கொள்வார்களா? அதற்கு ஏற்றவாறு திட்டங்களைத் தீட்டவும்.
- உங்கள் சபை ஊழியர்களுக்காகவும் அவர்கள் சென்றடையத் திட்டமிட்டுள்ள மக்களுக்காகவும் வாரந்தரக் கூட்டங்களை ஏற்பாடு செய்யவும்.
- சபையின் ஊழியர்களின் பணிகளில் ஏற்படும் பிரச்சனைகளையும் முன்னேற்றங்களையும் பற்றி முறையாக சபைக்கு அறிக்கைதர ஏற்பாடு செய்யவும்.
- புறக்கணிக்கப்பட்ட இடங்களுக்கு ஊழியர்களை அனுப்புவதற்கு மந்தையை ஒருங்கிணைக்க பிற சபைகளின் மேய்ப்பர்களுக்கு உதவவும்.
- ஊழியர்களை அனுப்புவதில் உங்கள் வட்டாரத்தில் உள்ள சபைகளுடன் ஒத்துழைக்க ஏற்பாடுகளைச் செய்யவும்.

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் சேர்ந்து ஆயத்தம் செய்க.

ஊழியர்களை ஆயத்தம் செய்து அனுப்ப உங்கள் சபை வைத்திருக்கும் திட்டங்களை **விவரிக்கவும்.**

அனுப்பப்படும் ஊழியர்களுக்குத் தேவையான திறமைகளைக் குறித்து **மீள்பார்வை** செய்க.

பிற இடங்களில் சுவிசேஷ ஊழியம் செய்தவர்கள் அதைக் குறித்துக் **கூறட்டும்.**

**குழந்தைகள்** தாங்கள் தயாரித்தவற்றை வழங்கட்டும்.

எரேமியா 31:31-34 ஐ வாசித்து **கர்த்தரின் பந்தி**யை அறிமுகப்படுத்தலாம். இயேசுவின் இரத்தத்தை அடிப்படையாய்க் கொண்ட ஒரு புதிய உடன்படிக்கையைப் பற்றி தீர்க்கதரிசி முன்னுரைப்பதை விளக்கவும். அப்பம் பிட்கும்போது அதையே நாம் கொண்டாடுகிறோம்.

ஜெபிக்கவும், ஊழியர்களை அனுப்புவது குறித்துத் திட்டமிடவும். இரண்டு அல்லது மூன்றுபேர் அடங்கிய **குழுக்களை** அமைக்கவும்.

மத்தேயு 28:19-20 ஐ சேர்ந்து **மனனம் செய்க.**

**புறக்கணிக்கப்பட்ட மக்கள் கூட்டம்**

உங்களுக்கு அருகிலும் தூரத்திலும் உள்ள பல இனங்கள், சமுதாயங்கள், பட்டிணங்கள் மற்றும் குடியிருப்புகளில் உள்ள மக்களுக்கு இயேசுவைப் பற்றிய நற்செய்தியைக் கூறப் போதுமான சபைகளும் கிறிஸ்தவர்களும் இல்லை. அங்குள்ள ஒரு சில விசுவாசிகள் நற்செய்தியைக் கூறி புதிய பெருகும் சபைகளை அமைக்க உங்களைப் போன்றவர்களை அனுப்பித்தர கர்த்தரிடம் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net